கணிப்பொறிக்கு அறிமுகம்

மாதிரி வினாத்தாள் - 1

11th Standard

Reg.No. : 

**கணிப்பொறியியல்**

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs | Total Marks : 40

## பகுதி - அ

10 x 1 = 10

1) எண் கணிதத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கருவி

(a) நகரும் சட்டம் (b) அபாகஸ் (c) நேப்பியர் குச்சிகள் (d) டிஃபரன்ஸ் என்ஜின்

2) மீக் கணிப்பொறி ஒரு வினாடியில் எத்தனை செயல்கூறுகளைச் செய்யும் வல்லமை படைத்தது?

(a) 100 கோடி (b) பலப்பல கோடி (c) 10 கோடி (d) 1 கோடி

3) எந்த தலைமுறை கணிப்பொறிகள் காந்த உருளையை நினைவகமாக பயன்படுத்தியது?

(a) நான்காம் (b) மூன்றாம் (c) இரண்டாம் (d) முதல்

4) மூன்றாம் தலைமுறை கணிப்பொறிகளில் பல டிரான்சிஸ்டர்கள் ஒன்றாக வைக்கப்பட்ட இடம் எது?

(a) ஒருங்கமை சுற்றுகள் (b) நுண்செயலிகள் (c) சில்லில் (d) வெற்றிடக் குழாய்கள்

5) பேனா சார்ந்த கணிப்பொறி என்பது இப்படியும் அழைக்கப்படும்?

(a) மேஜைக் கணிப்பொறி (b) தன்னுடைமை இலக்கவகை உதவியாளர் (c) நோட்டுப் புத்தகக் கணிப்பொறி

(d) ஒப்புமைவகை கணிப்பொறி

6) UNIVAC என்பது எதனின் குறுக்கம்?

(a) யுனிவர்சல் ஆட்டோமேடிக் கம்ப்யூட்டிங் (b) யுனிவர்சல் ஆட்டோ கம்ப்யூட்டர் (c) யுனிவர்சல் ஆட்டோமேடிக் கம்ப்யூட்டர்

(d) யூனியன் ஆட்டோ கம்ப்யூட்டர்

7) ஒருங்கமை சுற்றுகள் எந்த தலைமுறை கணிப்பொறியில் பயன்படுத்தப்படுகிறது?

(a) முதல் (b) இரண்டாம் (c) மூன்றாம் (d) நான்காம்

8) எதை நாம் பல்வேறு வகைகளிலும் திரட்டப்படும் அடிப்படைச் செய்தித்துணுக்கு என்கிறோம்?

(a) தகவல் (b) செயல்பாடு (c) கட்டளை (d) தரவு

9) தகவல் என்பது ________

(a) ஆராய்ந்து செயல்பட்டு உருவாக்கப்பட்டவை (b) நேரடி பயன் தராதது (c) தொழில் நுட்பம் சார்ந்தது (d) கட்டளைகளின் தொகுப்பு

10) எது ஒரு கணிப்புக்கான செயல்கூறுகளை வரிசைப்படுத்தி அவற்றை எவ்வாறு செய்வது என்று கூறுவதாகும்?

(a) தரவு (b) தகவல் (c) செயல்முறை (d) செயல்பாடு

## பகுதி - ஆ

10 x 2 = 20

11) ஆதி காலத்தில் மக்கள் எண்களை எவ்வாறு கூட்டினார்கள்?

12) நேப்பியர் குச்சிகளை பற்றி சுருக்கமாக எழுதுக.

13) டிஃபரன்ஸ் என்ஜின் பற்றி சுருக்கமாக விவரி.

14) ஹோல்ரித் டேபுலேடிங் மிஷின் என்றால் என்ன? இந்த கருவியின் பயன் என்ன?

15) கணிப்பொறி நிரல் என்றால் என்ன?

16) சிக்கலைத் தீர்ப்பது என்றால் என்ன?

17) வன்பொருள், மென்பொருள் என்றால் என்ன?

18) உள்ளீட்டுச் சாதனங்களின் செயல்கள் எனப்படுவது யாது?

19) வெளியீட்டுச் சாதனங்களின் செயல்கள் எனப்படுவது யாது?

20) தேக்ககம் என்றால் என்ன?

## பகுதி - இ

2 x 5 = 10

21) வன்பொருள், மென்பொருள்களுக்கு இடையே உள்ள உறவினை விளக்குக.

22) பின்வருவனவற்றை பற்றி விவரி.

1. அபாகஸ் 2. நேப்பியர் குச்சிகள் 3. நகரும் சட்டம் 4.சுழல் சக்கரக் கணிப்பான் 5. டிஃபரன்ஸ் என்ஜின்

*****************************************